# 4

# பாவத்தின் குற்றத்தை மேற்கொள்ளுதல்

நாம் படித்து மகிழ்கிற ஒரு செய்தித்தாளின் நகைச்சுவை பகுதி "பிறவியிலேயே தோற்பவன்" என அழைக்கப்படுகிறது. அதின் பிரதான கதாபாத்திரத்தை நான் விரும்புகிறேன், ஏனெனில் நான் என்னை அந்த நிலையில் வைத்துப்பார்க்க முடிகிறது. நான் "தோற்பதற்கென்றே பிறந்தவனாக" என்னை நானே அடிக்கடி உணருகிறேன். காரியங்கள் தவறாகப் போய்விடுகின்றன; வெற்றி நிச்சயமில்லாததாக இருக்கிறது மற்றும் பிரச்சனைகள் உருவாகின்றன, சில நேரங்களில் "நான் எப்போதாவது ஜெயிப்பேனா?" என கேட்டுக்கொள்கிறேன்.

வெற்றி பெறுவது சாத்தியமானது என்பது, தோற்றுப் போவதாக உணருகிற எனக்கும் மற்றவர்களுக்கும் ஒரு நற்செய்தியாக இருக்கிறது. பவுல் கூறியது போல, நாமும், கிறிஸ்துவினால் "முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்" என கூறலாம் (ரோமர் 8:37). அப்போஸ்தலனாகிய யோவான் தனது முதல் நிருபத்தின் 5:4, 5இல், சாட்சி கொடுத்துள்ளார்.

> தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.
>
> இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?

நாம் "உலகத்தை ஜெயிக்கமுடியும்"! 1 யோவான் 2:15-17இல் உலகம் பாவத்திற்கு இணையாக சொல்லப்பட்டிருப்பதால் நாம் பாவத்தை ஜெயிக்க முடியும் என யோவான் சொல்லிக்கொண்டிருந்தார். 1 யோவானின் நற்செய்தி - மற்றும் புத்தகத்தின் மையகருத்துகளில் ஒன்று - கிறிஸ்தவர்கள் பாவத்தின் மேல் "வெற்றியை அனுபவிப்பது" சாத்தியமானது என்பதாகவுள்ளது.

நாம் கிறிஸ்துவின் மூலம் பாவத்தின் குற்றத்தை மேற்கொள்ள முடியும். வேதாகமம் முழுவதும் நாம் பாவம் செய்யும்போது தேவனுக்கு இடறல் உண்டாக்குகிறோம் மற்றும் நாம் அவருடைய பார்வையில் குற்றவாளிகளாக மாறுகிறோம் என போதிக்கிறது (ஏசாயா 59:1, 2; காண்க எபேசியர் 2:12). இருப்பினும், கிறிஸ்துவின் மூலம் மற்றும் அவருடைய தியாகத்தின் மூலம் நம்முடைய கடந்த கால பாவங்கள் மன்னிக்கப்பட முடியும் எனவும் வேதாகமம் போதிக்கிறது. அது கிறிஸ்தவர்கள் பாவம் செய்யும்போது, அந்த பாவங்களும் கூட மன்னிக்கப்படக்கூடும் என போதிக்கிறது.

## கடந்த கால பாவங்களின் குற்றஉணர்வு

*1 யோவான் 3:5இல் கிறிஸ்து, "நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள் ..." என்று நமக்கு சொல்லப்படுகிறது. 3:16இல் இயேசு "தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினால் ..." என்று வாசிக்கிறோம். தம்முடைய ஒரே பேறான குமாரனாலே "நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினார்," அவர் "நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகவும்," "உலகத்தின் இரட்சகராகவும்" இருக்கிறார் (1 யோவான் 4:9, 10, 14). யோவான், இயேசு "நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியானார்" என்று கூறுகிறார் (1 யோவான் 2:2). இதன் விளைவாக எந்த சந்தேகமும் இன்றி - "நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளன" - என்பதை அறிவோம் (1 யோவான் 2:12).*

*ஆகவே, கிறிஸ்தவர்கள் என்ற முறையிலே, விசுவாசத்தினால் நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறின போது, தேவனுடைய கிருபையால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன (1 யோவான் 5:1). விசுவாசம் நாம் மன்னிக்கப்படுவதற்கு முதலாவதும் அடிப்படையானதுமான அவசியமாயிருக்கிறது. யோவான், "நம்முடைய விசுவாசமே - உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" என்று கூறினார் (காண்க 1 யோவான் 5:5அ).*

*இயேசுவின் தெய்வீக தன்மையை ஏற்றுக்கொள்கிற - விசுவாசம் மட்டும் நம்மை ஒரு தேவனுடைய பிள்ளையாக மாற்றுவதில்லை. ஒரு பாவி இயேசுவின் தெய்வீகத்தன்மையை ஏற்றுக் கொள்வது, அவருடைய பாவங்களிலிருந்து மனந்திரும்புவது மற்றும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவது ஆகியவற்றுக்குள் அவனை நடத்தும்போது மட்டுமே, அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன (நடபடிகள் 2:38). அப்போது மட்டுமே அவர் உண்மையிலேயே கடந்த பாவங்களின் குற்ற உணர்விலிருந்து வெற்றியை அனுபவிக்க முடியும்.*

## நிகழ்கால பாவங்களின் குற்றஉணர்வு

*கடந்த கால பாவங்களின் குற்றத்தின் மேல் வெற்றியை கொடுப்பதோடு, இயேசு தமது சீஷர்களின் நிகழ்கால பாவங்களின் குற்றத்திலிருந்து அவர்களுக்கு விடுதலை கொடுக்கிறார். நாம் பாவஞ்செய்வோமானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் (1 யோவான் 2:1). மேலும், "அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ... அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்" (1 யோவான் 1:7). மேலும், "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9).*

*கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசு தம்முடைய இரத்தத்தால் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். நாம் நம்முடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, அறிக்கையிட்டும், குற்ற உணர்வுள்ளவர்களாக இருந்தால், தேவன் நமக்கு செய்வதாக சொன்னதை செய்து நிறைவேற்றுவதில் அவருடைய வல்லமை அல்லது அவருடைய விருப்பத்தின் மேல் நம்முடைய சந்தேகத்தை நாம் காண்பிக்கிறவர்களாக இருக்கிறோம். நாம் பாவமன்னிப்பை*

தேடினபிறகு, நம்முடைய குற்றம் நம்மை துக்கத்தோடு கீழே அழுத்துவதற்கு அனுமதிக்கக்கூடாது. கிறிஸ்தவர்கள் பாவத்தின் குற்றத்தின் மேல் தொடர்ந்து வெற்றியை உடையவர்களாக இருக்க முடியும்!

## முடிவுரை

இயேசுவானவர் பாவத்தின் மேல் நாம் வெற்றிபெறுவதற்கான வழியை கொடுக்க வந்தார். அவர் தமது சொந்த இரத்தத்தினால் அதற்கான விலையை செலுத்தி அந்த வழியை வாங்கினார். சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதினால் அவரிடத்தில் வந்து மற்றும் ஒளியில் நடக்கிற எவரொருவருக்கும் அவருடைய பெரிதான இரட்சிப்பு ஒரு நிஜமான ஆசீர்வாதமாக இருக்கிறது.

---

## "அந்திக் கிறிஸ்து"

"அந்திக்கிறிஸ்து" என்ற வார்த்தை "கிறிஸ்துவுக்கு எதிராக" என்று அர்த்தப்படுகிறது. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களில் யோவான் மாத்திரமே இந்த சொல்லை பயன்படுத்தினார்; இது 1 யோவான் 2:18; 2:22; 4:3; மற்றும் 2 யோவான் 7ஆகியவற்றில் காணப்படுகிறது. இந்த வசனப்பகுதிகள் இவ்வாறு போதிக்கின்றன:

- அந்திக்கிறிஸ்து கடைசி காலத்தில் வந்து கொண்டிருந்தார் என்று யோவானின் வாசகர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள் (1 யோவான் 2:18).
- அநேக அந்திக்கிறிஸ்துகள் தோன்றியிருந்தார்கள்; எனவே வேளையானது கடைசி காலமாயிருந்தது (1 யோவான் 2:18).
- இயேசுவே கிறிஸ்துவாக இருந்தார் என்பதை மறுதலித்தவனே அந்திக் கிறிஸ்துவாக இருந்தான் (1 யோவான் 2:22).
- இயேசு மாம்சத்தில் வந்திருக்கிறார் என்பதை அறிக்கை பண்ணாத எவனும் அந்திக்கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிருக்கிறான் (1 யோவான் 4:3).
- யோவான் நிருபத்தை எழுதினபோது, ஏற்கெனவே அந்திக்கிறிஸ்து உலகத்தில் இருந்தான் (1 யோவான் 4:3).
- கள்ளப்போதகர்களும் வஞ்சகர்களும் அந்திக்கிறிஸ்துவுடன் சமமாக்கப்பட்டிருந்தார்கள் (2 யோவான் 7).

அந்திக் கிறிஸ்துவைப்பற்றி நாம் நிச்சயமாயிருக்கக்கூடிய உண்மைகள் இவைகள் மாத்திரமே என்றிருக்கும் போது, விளக்கவுரையாளர்கள் "கர்த்தருடைய நாள்" நிகழுமுன் வரப்போகிற, 2 தெசலோனிக்கேயர் 2:1-10ல் கூறப்பட்டுள்ள கேட்டின் - மகனை, அந்திக்கிறிஸ்துவுடன் சமமாக்குகிறார்கள், இந்த விளக்கத்தின்படி, யோவானின் நாட்களிலுள்ள "அந்திக்கிறிஸ்துகள்" கடைசிக்கால அந்திக்கிறிஸ்துவின் ஆவியை பகிர்ந்து கொண்டன.[1]

Guy N. Woods, என்பவர், அந்திக்கிறிஸ்து *"ரோமாபுரியின் போப்பாக"* இருந்தார் என நம்பினார்![2] கோபல் மியூசிக், "அந்திக்கிறிஸ்து" என்பது "அவருடைய மகத்துவமான வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியங்களுக்கு எதிரிடையாக, வெவ்வேறு காலங்களிலும் இடங்களிலும்

*பல வகையான தவறுகளில் தெளிவாகக் காணப்படுகிற ஒரு கருத்து அல்லது அக்கிரமத்தின் ஆவியாக இருக்கிறது" என்று கருத்து தெரிவித்தார்.*[3]

---

குறிப்புகள்

[1]கூடுதல் விபரங்கள் பின்வருபவற்றில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. F. F. Bruce, *The Epistles of John: Introduction, Exposition and Notes* (N.p.: Pickering & Inglis, 1970; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 65-68, and W. E. Vine, *The Epistles of John: Light, Love, Life* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1970), 35-36. [2]Guy N. Woods, *A Commentary on the New Testament Epistles of Peter, John, and Jude* (Nashville: Gospel Advocate Co., 1983), 242-43. [3]Goebel Music, "Difficult Passages in 1, 2, 3 John, No. I," *Denton Lectures* (1987), 385.